# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

**2023** நடு ஆண்டு மதிப்பீடு

ஒக்டோபர் **2023**

**© Verité Research**

# உள்ளடக்க அட்டவணை


வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால் ........ 3

இது எப்படி செயல்படுகிறது? ........ 3

வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் ........ 4

முன்னேற்றக் கண்காணிப்பான் ........ 5

பொறுப்புத்துறத்தல் ........ 35

## *வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்*

**“வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”** என்பது publicfinance.lk தளத்தின் கீழுள்ள ஒரு டாஷ்போர்டு ஆகும். இது வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் செயல்திறனைக் கண்காணிக்கிறது.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த டாஷ்போர்டு, அரசாங்கம் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் முன்வைக்கும் வாக்குறுதிகள் குறித்த இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முனைகிறது:

- அரசாங்கம் சொல்வதைச் செய்கிறதா?
- அரசாங்கம் செய்வதைச் சொல்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பகிரங்கமாக வழங்குவதன் மூலம் டாஷ்போர்டு கீழுள்ளவற்றை அடைய முயல்கிறது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்

(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாக்குதல்

## *இது எப்படி செயல்படுகிறது?*

2023 நடு ஆண்டு மதிப்பீடு 2023 வரவுசெலவுத் திட்ட உரையில் வெளிப்படையாக முன்மொழியப்பட்ட 25 செலவின முன்மொழிவுகளையும் 7 ஒழுங்குமுறை முன்மொழிவுகளையும் கண்காணித்தது. செலவின முன்மொழிவுகள் செலவின ஒதுக்கீடுகள் மற்றும் அதன் அளவிடக்கூடிய விளைவுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை, கொள்கை திட்டங்கள் சட்டமியற்றும் சட்டங்கள் அல்லது நடைமுறைக்கு வர வேண்டிய ஒழுங்குமுறை அறிவிப்புக்களை (வர்த்தமானிகள்) கொண்டிருக்கின்றன.

இவ்வியங்குதளம் வருடத்திற்கு இரண்டு முறை புதுப்பிக்கப்படுகிறது. முன்மொழிவுகள் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன: வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம். நாடு ஆண்டு மதிப்பீடு, அந்தந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான முன்மொழிவுகளின் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது. ஆராய்ச்சிக் குழு, தொடர்புடைய தகவல்களை ஆன்லைனில்

முன்கூட்டியே வெளிப்படுத்துவதைக் கண்காணித்தாலும், அது முதன்மையாக 2016 இன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலக்கம் 12 மூலம் செயல்படுத்தும் நிறுவனங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளையே சார்ந்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் நடு ஆண்டு மதிப்பீடுகளுக்கு, பின்வரும் திகதிகளில் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன: ஜூலை 26, 10 மற்றும் ஆகஸ்ட் 15, 2023. மதிப்பீட்டிற்கான தகவல்கள் 21 வேலை நாட்களுக்கு முகவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் காலகட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட எந்த தகவலும் மதிப்பீட்டிற்காக கருதப்படவில்லை.

## *வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்*

இச்சுட்டியானது **அரசாங்கம் தான் செய்வது பற்றி** எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதை கண்காணிக்கிறது. இது ஒவ்வொரு அமைச்சரவை தீர்மானங்கள்/வாக்குறுதிகளை செயல்படுத்தப்படுவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் நிலையை அளவிடுகிறது. சுருக்கமாக, இந்தச்சுட்டி வெளிப்படைத்தன்மையை கண்காணிக்கிறது.

முன்மொழிவுகளின் முதல் ஆறு மாத கால முன்னேற்றம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கம் எந்த அளவிற்கு வெளிப்படையாக உள்ளது என்பதை நடு ஆண்டு மதிப்பீடு அளவிடுகிறது. ஆண்டு இறுதி மதிப்பீடு, செலவினங்களுக்கான முன்னேற்றம் மற்றும் முழு ஆண்டிற்கான கொள்கைத் திட்டங்கள் பற்றிய தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அளவிடுகிறது.

வெளிப்படைத்தன்மை என்பது மதிப்பீட்டு காலகட்டத்தின்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதோடு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

**வெளிப்படையற்றது** எவ்வித தகவலும் இல்லை.

**மட்டுப்படுத்தப்பட்டது** எவ்வித முன்னேற்றத்தையும் தீர்மானிக்க போதுமான தகவல் இல்லை.

| | |
|---|---|
| **ஒத்துழைக்கப்படாதது** | தகவல்களைப் பெறுவதற்கும் மதிப்பிடுவதற்கும் கடும் முயற்சி தேவைப்பட்டது. |
| **ஒத்துழைக்கப்பட்டது** | தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டன. |
| **வெளிப்படையானது** | முழுத் தகவல்களும் கேற்பதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. |

*முன்னேற்றக் கண்காணிப்பான்*

இந்தச் சுட்டியானது **அரசாங்கம் தாம் செய்வதாக சொல்வதை** எந்தளவுக்கு செய்கிறது  என்பதை கண்காணிக்கிறது. அமைச்சரவை தீர்மானங்கள்/வாக்குறுதிகளை பொறுப்பான நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட காலக்கெடு மற்றும் மெயில் கற்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்ற நிலையை மதிப்பிடுகிறது.

செலவின முன்மொழிவுகளுக்கான நடு ஆண்டு மதிப்பீட்டின் முன்னேற்றம், பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| **கைவிடப்பட்டுள்ளது** | வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது  ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| **புறக்கணிப்பட்டுள்ளது** | வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| | **பின்தங்கியுள்ளது** | வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது , ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| | **முன்னேறியுள்ளது** | வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது டன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[1] |

செலவின முன்மொழிவுகளுக்கான இறுதி ஆண்டு மதிப்பீட்டின் முன்னேற்றம், பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| | **தகவல் வெளிப்படுத்தப்பட வில்லை** | வாக்குறுதியின் நிலையை தீர்மானிக்கத் தகவல் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை. |
| | **கைவிடப்பட்டுள்ளது** | வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அல்லது வாக்குறுதி செயல்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| | **முன்னனற்றமற்றது** | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் குறைவாக எட்டப்பட்டுள்ளது. |
| | **பகுதியளவு நிறைவேறியது** | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் 66%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |

[1] வரவுசெலவுத்திட்ட ஆண்டின் ஜூன் 30 ஆம் திகதி வரை அடையப்பட்ட முன்னேற்றம், குறிப்பிட்ட காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 90% க்குள் இருந்தால், ஒரு வாக்குறுதி முன்னேறுவதாகக் கருதப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **கணிசமான அளவு நிறைவேறியது** | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 66%க்கும் 80%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |
| | **முற்றாக நிறைவேறியது** | வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 80%க்கும் அதிகமாக எட்டப்பட்டுள்ளது. |

கொள்கைத் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| | **வெளிப்படுத்தப்படவில்லை** | முன்மொழிவின் நிலையை தீர்மானிக்கத் தகவல்கள் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை. |
| | **நிறைவேற்றப்படவில்லை** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதை சம்பந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| | **பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கு அன்றி ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| ✅ **நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவை த் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கு தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன் மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

# விரிவான ஆய்வு முடிவுகள்

## செலவின முன்மொழிவுகள்

| முன்மொழிவு | வெளிப்படைத்தன்மை | முன்னேற்றம் | செயற்படுத்தும் நிறுவனம் |
|---|---|---|---|
| சமுர்த்தி, முதியோர், அங்கவீனர் மற்றும் சிறுநீரக நோயாளர்களின் கொடுப்பனவுகளின் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை தொடர்ந்து வழங்குதல். | வெளிப்படையற்றது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், 2023.02.06 திகதியிட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையானது, ஜனவரி 2023க்கான பெறுநர்களின் ஒப்புதல் மற்றும் பணப் பரிமாற்றங்களுக்கான வழிமுறைகளை பட்டியலிடுகிறது. இந்த சுற்றறிக்கை மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் ஆகியவற்றுடன் பகிரப்பட்டுள்ளது. இருப்பினும், கூடுதல் தகவல் எதுவும் நிகழ்நிலையில் கிடைக்கவில்லை.<br><br>தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை (RTI) 15, ஆகஸ்ட் 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் முகவர் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>நிகழ்நிலையில் எந்த தகவலும் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை (RTI) மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்து கை அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களின் மறுசீரமைப்பு மற்றும் கட்டுமானம் | மட்டுப்படுத்தப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், பின்வருவனவற்றிற்கான கொள்முதல் ஆவணங்கள் நிகழ்நிலையில் கிடைக்கப்பெற்றன: 1. கேகாலை மாவட்டத்தில் யட்டியந்தோட்டை-மகம்மன வீதியில் களனி ஆற்றின் குறுக்கே உள்ள கரகொட பாலத்தின் மறு தளம் (RDA அல்லாதது); 2. ரஜமாவத்தை வீதியின் விரிவாக்க கட்டுமானம்.<br><br>26 ஜூலை 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அந் நாளிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு ஆனால் 21 நாட்களுக்குள் 23, ஆகஸ்ட் 2023 அன்று தகவல் பெறப்பட்டது,. 2023 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளுக்கான முன்மொழிவின் கீழ் நிதி இலக்குகள் மற்றும் குறிப்பிட்ட சில துணைத் திட்டங்களின் செயல்திறன் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன. இருப்பினும், மொத்த ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 50% வரையிலான செயல்பாடுகளின் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் வழங்கப்படவில்லை. எனவே, முன்மொழிவின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதாக இல்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் **நிறுவனத்தின்** (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) RTI பதிலின்படி, மொத்த ஒதுக்கீடு ரூ. 2,000 மில்லியன் மாகாணம்/பிரிவு வாரியாக ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது: கட்டுமானப் பிரிவு (ரூ. 900 மில்லியன்), சப்ரகமுவ மாகாணம் (ரூ. 397.17 மில்லியன்), மத்திய மாகாணம் (ரூ. 449.99 மில்லியன்), ஊவா மாகாணம் (ரூ. 83.05 மில்லியன்) மற்றும் தென் மாகாணம் (ரூ. 169.79 மில்லியன்). நான்கு மாகாணங்களின் கீழ் குறிப்பிட்ட சில துணைச் செயல்பாடுகளுக்கு முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்தாலும், கட்டுமானப் பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட பௌதீக இலக்குகள்/முன்னேற்றம் மற்றும் நிதி இலக்குகள்/முன்னேற்றம் ஆகியவை வழங்கப்படவில்லை. மொத்த ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 50% பங்கைக் கொண்ட கட்டுமானப் பிரிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தகவல்கள் கிடைக்காததால், முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| சிறுவர் போஷாக்கினை மேம்படுத்தல் | வெளிப்படையற்றது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>26, ஜூலை 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | சுகாதார அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளப் பாதுகாப்பு முறைமையினை மேம்படுத்துதல் | ஒத்துழைக்கப்பட்டது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>26, ஜூலை 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது, 21, ஆகஸ்ட் 2023 அன்று தகவல் பெறப்பட்டது, இது RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்கு பிறகு ஆனால் 21 நாட்களுக்குள். வழங்கப்பட்ட தகவல் பொருத்தமானதாகவும் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பயனுள்ளதாகவும் இருந்தது. | முன்னேறியுள்ளது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, திட்டத்துக்கான உத்திகள் வகுக்கப்பட்டுள்ளதோடு 2023 மார்ச்-டிசம்பர் இடையேயான காலப்பகுதிக்கான குறிக்கோள்கள் நிறுவப்பட்டுள்ளன, இது பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கியது (திட்டம் டிசம்பர் 2023க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது).<br><br>செயல்படுத்தும் நிறுவனம் ஜூன் 2023 வரை உண்மையான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பற்றிய தகவலையும் வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்ட தகவலின்படி, ஜூன் 2023 க்கு நிர்ணயிக்கப்பட்ட பௌதீக இலக்கு 20% ஆகும், மேலும் திட்டமானது அதன் பௌதீக முன்னேற்ற இலக்கை தாண்டி, 40% ஐ எட்டியுள்ளது. இருப்பினும், நிதி முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை உள்ளது, ரூ. 6.28 மில்லியன் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ. 98 மில்லியன். நிதி முன்னேற்றம் 6.4% ஆக உள்ளது, இது ஜூன் 2023 நிலவரப்படி திட்டத்தின் செலவு திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திற்குக் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.<br><br>இதனால் ஒட்டுமொத்த முன்னேற்றம் 103% ஆகும். | நீர்ப்பாசன அமைச்சு |
| வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான புதிய பொருளாதார வலயங்களை அமைத்தல். | வெளிப்படையற்றது<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>26 ஜூலை, 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br><br>RTI கோரிக்கை மூலமாகவோ அல்லது நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கும் தகவல் மூலமாகவோ செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந் தோ எந்த தகவலும் பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| முதியோர் / மாற்றுத் திறனாளிகள் / விதவைகள் வீட்டலகு தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்துதல். | மட்டுப்படுத்தப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>RTI கோரிக்கை 26 ஜூலை 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு 21 நாட்களுக்குள் 22, ஆகஸ்ட் 2023 அன்று தகவல் பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டை மேற்கொள்ள போதுமானதாக இல்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் ஆரம்ப RTI பதிலின்படி, முன்மொழிவை செயல்படுத்துவதற்கான நிதியை வழங்குவது குறித்து திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் (DTO) 16 ஜூன் 2023 அன்று விசாரணை சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இருப்பினும், செயல்படுத்தும் நிறுவனத்திற்கு DTO பதிலளிக்கவில்லை. மேலும், 61 பிரதேச செயலகங்களில் உள்ள 610 பயனாளிகளுக்கு கடன் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் (மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு) இரண்டாவது RTI பதிலின்படி, ஆரம்ப RTI ஆனது மூன்று நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டது: முதியோர்களுக்கான தேசிய செயலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம். மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம், RTI இடமாற்றத்திற்கு பதிலளித்து, இந்த முன்மொழிவை செயல்படுத்துவதற்கு செயலகத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறியது. 100 மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் தொழில்களை விரிவுபடுத்த மானியம் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து பிரதேச செயலகங்களிலிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது சாத்தியமான | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | பயனாளிகளை தெரிவு செய்வதற்காக பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் டிசம்பர் 31, 2023க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>தேசிய முதியோர் செயலகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தகவல் அறியும் உரிமைச் சட்ட இடமாற்றத்திற்குப் பதிலளிக்கும் வகையில் வழங்கிய தகவல்கள் மேற்கூறிய முன்மொழிவுடன் பிரத்தியேகமாக இல்லை, எனவே முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்த முடியவில்லை.<br><br>சம்பந்தப்பட்ட முகவர்களால் பகிரப்பட்ட தகவலின் தன்மையைக் கருத்தில் கொண்டு, முன்மொழிவின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு மதிப்பீட்டை மேற்கொள்ள முடியாது. போதிய தகவல்கள் கிடைக்காததால், முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | |
| 10 விவசாய தொழில்முயற்சியாண்மை கிராமங்களை நிறுவுதல் | ஒத்துழைக்கப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>26 ஜூலை, 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேலும் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு 21 நாட்களுக்குள் 21, ஆகஸ்ட் 2023 அன்று தகவல் பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது. | முன்னேறியுள்ளது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, திட்டத்துக்கான உத்திகள் வகுக்கப்பட்டுள்ளது, மேலும் 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கிய நோக்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் 2023 ஜூன் 1 அன்று தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் ஜூலை 2023 முதல் ஆறு மாத காலத்திற்கு ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>அத்துடன் , செயல்படுத்தும் நிறுவனத்தால் பகிரப்பட்ட தகவல், உண்மையான ஒதுக்கீடு ரூ. 250 மில்லியன் முதல் ரூ. 190 மில்லியன். திருத்தப்பட்ட செயல்திட்டத்தின்படி 11 விவசாய | நீர்ப்பாசன அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | தொழில்முனைவோர் கிராமங்களை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின்படி 10 விவசாய தொழில்முயற்சியாண்மை கிராமங்களை நிறுவ திட்டமிடப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பதில், முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான அரச நிறுவனமாக மகாவலி அதிகாரசபையை அடையாளப்படுத்துகிறது. | |
| இளம் பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான கடன் திட்டம் | வெளிப்படையற்றது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>தேசிய வரவு செலவுத் திணைக்களமானது அபிவிருத்தி நிதித் திணைக்களத்தை முன்மொழிவைச் செயல்படுத்தும் முகவராக அடையாளம் கண்டுள்ளது. எனவே, வெரிட்டே ரிசர்ச் 26 2023 ஜூலை அன்று அபிவிருத்தி நிதித் திணைக்களத்திடம் RTI கோரிக்கையை தாக்கல் செய்தது. எவ்வாறாயினும், அபிவிருத்தி நிதித் திணைக்களம் மேற்கூறிய வரவு செலவுத் திட்டமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பதிலளித்ததுடன், தேவையான தகவல்களைப் பெறுவதற்கு நாங்கள் RTI விண்ணப்பத்தை அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு கோரினோம். எனவே, 18 ஆகஸ்ட், 2023 அன்று மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சிடம் RTI கோரிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும், செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை மற்றும் RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |

| முதலீட்டுக்கு நட்புச் சூழல் | ஒத்துழைக்கப்பட்டது | பின்தங்கியுள்ளது | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு |
|---|---|---|---|
| | முன்மொழியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>26, ஜூலை 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேலும் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு 21 நாட்களுக்குள் 21, ஆகஸ்ட் 2023 அன்று தகவல் பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்துவதற்கு பொருத்தமானதாக இருந்தது. | முன்மொழியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, திட்டத்துக்கான உத்திகள் வகுக்கப்பட்டுள்ளதோடு , மேலும் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் காலாண்டு பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கிய செயல்திட்டம் 2023 க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. ரூ. 50 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும் மீதியான ரூ. 150 மில்லியன் ஏனைய பல்வேறு நடவடிக்கைகளுகாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.. இந்த ரூ. 150 மில்லியனுக்காக திட்டமிடப்பட்ட பணிகள் ஜனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்ட செயலணியினால் நிறைவேற்றப்படுகிறது. இரண்டாவது காலாண்டு வரையிலான நிதி இலக்குகளின் ஆறு துணை நடவடிக்கைகளில் நான்கிற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் ஆறு துணை நடவடிக்கைகளில் ஒரு துணை நடவடிக்கைக்கு மட்டுமே நிதி முன்னேற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவது காலாண்டு வரையிலான பௌதிக இலக்குகள் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் ஆறு நடவடிக்கைகளில் இரண்டிற்கு மட்டுமே பௌதிக முன்னேற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, வழங்கப்பட்ட தகவல்களின்படி, பௌதிக முன்னேற்றம் சராசரியாக 30% மற்றும் நிதி முன்னேற்றம் அந்தந்த இலக்குகளுக்கு எதிராக சராசரியாக 2% ஆகும்.<br>இதனால் ஒட்டுமொத்த முன்னேற்றம் 16% ஆகும். | |

| | வெளிப்படையற்றது | வெளிப்படுத்தப்படவில்லை | |
|---|---|---|---|
| கறுவா தொழில் துறைக்கான புதிய திணைக்களம் | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், கருவாவுக்கான புதிய திணைக்களம் ஒன்றை நிறுவுவது தொடர்பான அமைச்சரவை தீர்மானம் 2023.08.14 அன்று எடுக்கப்பட்டது (அமைச்சரவை முடிவு எண். 8). அதன்பட,. கறுவா அபிவிருத்தி திணைக்களம் என பெயரிடப்பட்ட புதிய திணைக்களத்தை நிறுவுவதற்கு ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடம் இருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை.<br><br>2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கான அந்தந்த செயல்படுத்தும் முகவர் நிறுவனங்களை பற்றிய தகவல்களைக் கோரி 2023 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் திகதி தேசிய வரவு செலவு தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தில் (NBD) தாக்கல் செய்யப்பட்ட RTI இல், NBD, கறுவா கைத்தொழில் திணைக்களத்தை இந்த முன்மொழிவைச் செயல்படுத்தும் முகவராக அடையாளம் கண்டுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய ஒரு திணைக்களத்தை நிகழ்நிலையில் அல்லது தொலைபேசி மூலம் பல்வேறு அரசு நிறுவனங்களுடன் தொடர்ந்து உரையாடலின் போது கண்டறிய முடியவில்லை. ஆகஸ்ட் 15, 2023 அன்று பெருந்தோட்ட அமைச்சிடம் RTI கோரிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. எனினும், பலமுறை பின்தொடர்ந்த போதிலும் அமைச்சிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. | எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | பெருந்தோட்ட அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| கிராமிய பாடசாலைகளில் வசதிகளை மேம்படுத்துதல் | **வெளிப்படையற்றது**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜூலை 26, 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | **வெளிப்படுத்தப்படவில்லை**<br>எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | கல்வி அமைச்சு |
| புதிய மருத்துவ பீடத்தினை தாபித்தல் | **வெளிப்படையற்றது**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணப்படும் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் நிறுவப்படுவது ஐந்தாவது பீடமாக உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு அதிவிசேட வர்த்தமானி எண். 2324/12 மார்ச் 20, 2023 அன்று வெளியிடப்பட்டது. புதிதாக நிறுவப்பட்ட பீடத்திற்கு பீடாதிபதி நியமனம் உறுதிசெய்யும் வகையில், அதிகாரப்பூர்வ இணையதளமும் தொடங்கப்பட்டது. மேலும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர ஆற்றிய உரையில், வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியானது காணி சுவீகரிப்பு உள்ளிட்ட மருத்துவ பீடத்தை நிறுவுவதற்கு தேவையான அடிப்படை செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>ஜூலை 26, 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | **வெளிப்படுத்தப்படவில்லை**<br>எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | கல்வி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| இலத்திரனியல் கொடுப்பனவு முறை | ஒத்துழைக்கப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், ICTA இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மாதாந்த கண்காணிப்பு அறிக்கை (MMR) தொழில்நுட்ப அமைச்சு (MoT) மற்றும் ICTA உயர் முன்னுரிமை திட்டமாக 'இலத்திரனியல் கொடுப்பனவு தளத்தை' அடையாளப்படுத்துகிறது. இது 30 ஏப்ரல் 2023 இல் திட்டத்தின் முன்னேற்றத்தையும் பின்வருமாறு பதிவு செய்துள்ளது: "வரைவு கருத்துக் குறிப்பு ICTA ஆல் தயாரிக்கப்பட்டு MoTக்கு சமர்ப்பிக்கப்படும்.கருத்துக் குறிப்பின்படி முழுத் தீர்வும் மூன்று கட்டங்களைக் கொண்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு அடிப்படை நிகழ்நிலை பரிமாற்ற வசதிகளை வழங்குவது குறித்து விவாதிக்க உரிமம் பெற்ற வணிக வங்கிகளுடன் மே 15, 2023 அன்று கூட்டம் நடைபெறும்.."<br><br>RTI கோரிக்கை 26 ஜூலை 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது மற்றும் தகவல் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அதாவது ஆகஸ்ட் 09, 2023 அன்று பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்த போதுமானதாக இருந்தது. | பின்தங்கியுள்ளது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, ஆகஸ்ட் 01 ஆம் திகதி செயல் திட்டம் மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கை அடங்கிய மூன்று பக்க ஆவணம் பகிரப்பட்டது. முன்னேற்ற அறிக்கையில் பகிரப்பட்ட தகவல்களின்படி, இரண்டாவது காலாண்டின் இறுதிக்குள் அல்லது இரண்டாவது காலாண்டின் போது முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் பல நடவடிக்கைகள் ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரை முடிக்கப்படவில்லை. 2023 ஜனவரி முதல் ஜூன் வரை எந்தச் செலவும் இல்லை என்பதையும், தீர்வை மேம்படுத்துவதற்கு2023 பட்ஜெட் உரையில் 200 மில்லியன் ஒதுக்கப்பட்டாலும் அரசு நிதி பயன்படுத்தப்பட மாட்டாது என்பதையும் அந்த பதில் எடுத்துக்காட்டுகிறது. | தொழில்நுட்ப அமைச்சு |
| அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களைக் குறைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை மேம்படுத்துதல் | மட்டுப்படுத்தப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>RTI கோரிக்கை ஆகஸ்ட் 15, 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் செப்டம்பர் 04, 2023 அன்று தகவல் பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்த போதுமானதாக இல்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் காலாண்டுக்கான பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கிய பல செயல் திட்டங்கள் மற்றும் திருத்தப்பட்ட செயல் திட்டங்கள் 2023 க்காக தயாரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ள | கமத்தொழில் அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | செயல்பாடுகள் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு ரூ. 150 மில்லியனை எட்டவில்லை என்பதோடு மொத்த ஒதுக்கீடு ரூ. 150 மில்லியன் பற்றி எந்த தகவலும் வழங்கப்படவில்லை. திருத்தப்பட்ட செயல்பாட்டுத் திட்டத்தின்படி வழங்கப்பட்ட செயல்பாடுகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 45.8 மில்லியன் ஆகும்.<br><br>மேலும், 2023.07.31 இன் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறித்த முன்னேற்ற அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் ஜூலை 2023 இன் இறுதியில் வழங்கப்பட்டுள்ள அதே நேரத்தில் பௌதீக மற்றும் நிதி இலக்குகள் ஜூன் இறுதியில் (இரண்டாம் காலாண்டில்) வழங்கப்பட்டுள்ளன. இது காலவரிசையில் ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது, ஏனெனில் முன்னேற்ற அறிக்கைகள் குறிப்பிட்ட இலக்குகளை (இரண்டாம் காலாண்டிற்கு ஜூன் இறுதியில்) விட பிற்பட்ட திகதியில் (ஜூலை இறுதியில்) உள்ளன. இரண்டாவது காலாண்டின் முடிவில் உள்ள முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் இந்த தவறான காலவரிசை அமைப்பு ஒரு சவாலாக உள்ளது, ஏனெனில் முன்னேற்ற அறிக்கைகள் இரண்டாவது காலாண்டிற்கு அப்பாற்பட்ட காலத்தை உள்ளடக்கியது. இதனால், முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| விவசாயத் தொழில்துறையில் இளைஞர்களைத் தக்கவைத்தல் | மட்டுப்படுத்தப்பட்டது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>RTI கோரிக்கை ஆகஸ்ட் 15, 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது, மேலும் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் செப்டம்பர் 04, 2023 அன்று தகவல் பெறப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்ற மதிப்பீட்டை நடத்த போதுமானதாக இல்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>செயல்படுத்தும் நிறுவனத்தின் RTI பதிலின்படி, ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் காலாண்டுக்கான பௌதீக மற்றும் நிதி இலக்குகளை உள்ளடக்கிய செயல் திட்டம் 2023 க்காக தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ள செயல்பாடுகள் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு ரூ. 120 மில்லியனை எட்டவில்லை என்பதோடு மொத்த ஒதுக்கீடு ரூ. 120 மில்லியன் பற்றி எந்த தகவலும் வழங்கப்படவில்லை. மேலும், இலக்குகளுக்கு எதிரான முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிதி அல்லது பௌதீக முன்னேற்றம் தொடர்பான எந்த தகவலும் வழங்கப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | கமத்தொழில் அமைச்சு |
| வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு முகவராண்மை | வெளிப்படையற்றது<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிகழ்நிலையில் எந்த தகவலும் கிடைக்கவில்லை.<br><br>ஜூலை 26, 2023 அன்று RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது; இருப்பினும், பல பின்தொடர்தல்கள் இருந்தபோதிலும் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. | வெளிப்படுத்தப்படவில்லை<br>எந்த தகவலும் நிகழ்நிலையில் முன்கூட்டியே கிடைக்கவில்லை அல்லது RTI கோரிக்கை மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. தகவல் கிடைக்காததால் முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
